[1979 அக்டோபர் 29]

வந்திருக்கிறது. அமைச்சரவர்கள், அப்படி இல்லவே இல்லை, அப்படிப்பட்ட நிலைமையே இல்லை என்று கூறுவது விசித்திரமாக இருக்கிறது. அப்படிப்பட்ட கண்டு பிடிப்பு வந்த பிறகு கூட தொடர்ந்து வயிற்று வலி இருக்கிறது. அந்தப் பகுதியில் சுமார் 1 இலட்சம் மக்கள் வசிக்கிறார்கள். 17,000 தொழிலாளர்களும், அவர்கள் குடும்பங்களும், வியாபாரிகளும் அங்கு இருக்கிறார்கள். அவர்களில் ஏராளமான பேர் வயிற்று வலியினால் பீடிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே, அதன்மீது உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதலிலே சொன்னதுதான் சரி. அது பாதிக்காது என்று முடிவு செய்து விட்டார்கள்.

காளப்பநாயக்கன்பட்டிக்குக் குடிநீர் வசதி.

*வினா எண் 33—திரு. வ. சின்னசாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் காளப்பநாயக்கன்பட்டிக்குக் குடிநீர் வழங்குவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) அத் திட்டம் எந்த நிலையில் உள்ளது ? அது எப்பொழுது எடுத்துக்கொள்ளப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) இல்லை.

(ஆ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது. நடைபெற்றுவரும் கள ஆய்வுப்பணிகள் முடிந்த பிறகே திட்டம் செயல்படுத்தக்கூடியதா என்ற முடிவு தெரியும்.

பல்லவன் போக்குவரத்து விரைவுப் பேருந்துகள்.

*வினா எண் 34—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லவன் போக்குவரத்து விரைவு வண்டியிலும், மற்றும் நீண்ட தூரம் செல்லும் வண்டிகளிலும் லக்கேஜ்-கேரியர் அவசியம் இருக்கவேண்டும் என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் என்றால், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?